23rd March 1960]

THE HON. SRI R. VENKATARAMAN : புல் பைனன்ஸ் ஸ்கீம் உள்ள இடங்களில் அதைச் செய்வதாகத்தான் யோசனை. அதாவது நிலமில்லாத விவசாயிகளுக்குக் கூட, அவர்கள் செய்யக்கூடிய உற்பத்தியை மதிப்பிட்டு அதற்கேற்ப அவர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். இப்போது 17 இடங்களில் புல் பைனன்ஸ் ஸ்கீம் அமலுக்கு வருகிறது. இந்த இடங்களில் இத் திட்டம் மேற்கொள்ளப்படும். மேற்கொண்டு எந்த இடங்களுக்கு புல் பைனன்ஸ் ஸ்கீம் விஸ்தரிக்கப் படுகிறதோ அந்த இடங்களில் அந்த முறையில் கடன் கொடுக்கப்படும்.

Rural credit

* 527 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of Sri K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken for the development of integrated rural credit under the Second Five-Year Plan?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement[a] is laid on the table of the House.

SRI K. RAMACHANDRAN : It is stated here that 50 per cent of the rural population will be served in the year 1959–60. May I know whether this will cover at least the rural population in all the villages of the Block area?

THE HON. SRI R. VENKATARAMAN : It would not be possible to say whether all the villages in the Block area would be covered. But, I may state that 50 per cent of the total population of the State would be covered. Because, there are large areas in which the Block is not extended, but where a substantial number of villagers are members of co-operative societies.

SRI J. MATHA GOWDER : இந்த அறிக்கையில் 17 லாண்ட் மார்ட்கேஜ் பாங்குகள் திறக்கப்பட்டிருப்பதாகக் கண்டிருக்கிறது. ஒரே இலாகாவின் கீழ் இருக்கும் கிராம ஸொஸைடிகளில்கூட கூட்டுப் பட்டாக்களுக்குட்பட்ட நிலங்களைப் பொறுத்துக் கிராம மக்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த ஸொஸைடிகளால் கிராம மக்கள் பயனடைவதில்லை என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ? அப்படியானால், இனிமேல் கூட்டுப் பட்டாக்களுள்ள நிலங்கள் பேரிலும் கடன் கொடுக்கச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது ஒரு சட்டப் பிரச்னை. கூட்டுப் பட்டாவில் யாருக்கு அதிகாரம், உரிமை இருக்கிறது என்பது தெரிவதில்லை. அந்த உரிமை உள்ளவர்களுக்குத்தான் கிராம பாங்குகளில் கடன் கொடுக்க முடியும்.

SRI. V. SUBBIAH : ஜமீன் பிராந்தியங்களிலும் இனும் பிராந்தியங்களிலும் உள்ள நிலங்கள் பல ஸர்வே செய்யப்பட வேண்டிய நிலையிலேயே இன்னும் இருப்பதால், அவைகளின் பேரில் கடன் பெற முடியாத நிலைமை இருக்கிறது. அந்த கிராமங்களில் ரீஸெட்டில்மெண்ட் ஆவதற்குள்ளேயே கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு லாண்ட் மார்ட்கேஜ் பாங்கு வைக்க வேண்டும் என்ற கொள்கையை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், சில தாலுகாக்களில் அவைகளை வைக்கமுடியவில்லை என்றால் அதற்குக் காரணம் அங்குள்ள முந்திய ஜமீன் நிலங்களுக்கு ரயத்துவாரிப் பட்டா கொடுக்க வேண்டிய காரியம் செய்து முடிக்கப்படாமல் இருப்பதுதான். அந்த இடங்களில் ஸர்வேயும் ஸெட்டில்மெண்டும் முடிந்தவுடன் லாண்ட் மார்ட்கேஜ் பாங்குகள் வைக்கப்படும்.

[a] Printed as Appendix III on pages 371–372 infra.

[23rd March 1960

SRI S. M. ANNAMALAI : சமுதாய நலத் திட்டப் பகுதி களில் உள்ள கூட்டுறவு ஸொஸைடிகளில் மெம்பர்களாக இருப்பவர்கள் சமுதாய நலத் திட்டத்தில் கடன் பெற முடியாது என்று இப்போது சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன் காரணமாக, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் சங்கங்களிலிருந்து விலகி சமுதாய நலத் திட்டங்களில் கடன் பெறுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இதைப் போக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : புல் ஃபைனான்ஸ் ஸ்கீம் இருக்கும் இடங்களில் எல்லாம் கடன்களையும் கூட்டுறவுச் சங்கங் களிலிருந்தே பெற வேண்டும். தனித் தனியாகக் கடன்கள் கொடுக்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்வதுதான் கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கும் நல்லது, கூட்டுறவு இயக்கம் அபி விருத்தியடைவதற்கும் சாதகமாக இருக்கும். இதனால் எந்தவிதமான கஷ்டமும் ஏற்படுவதாகவும் தெரியவில்லை. அவ்வாறு நிர்பந்தங்கள், கஷ்டங்கள் இருக்குமானால் அவற்றைப்பற்றி எழுதியனுப்பினால் கவனிக் கிறோம்.

Veterinary College

* 528 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to start another Veterinary College in Madras State; and

(*b*) if so, where, when and at what cost?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Such a proposal is under the consideration of the Government.

SRI A VEDARATHNAM : இதற்கு வெளிநாட்டு உதவி ஏதே னும் கிடைக்கிறதா ? அப்படியானால் என்ன உதவி கிடைக்கிறது ? இந்தக் கல்லூரியை எந்த இடத்தில் ஆரம்பிப்பதாக சர்க்கார் யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் கனம் அமைச்சர் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் நாம் எடுத்துக்கொள்ளும் திட்டங்களுக்கு வேண்டிய நிபுணர்கள் எத்தனை பேர் என்று கணக்கிட்டுப் பார்த்ததில், இப்போ துள்ள வெடரினரி காலேஜில் படித்துத் தேறி வரக்கூடியவர்களைவிட அதிகமான பேர்கள் வேண்டியிருக்கும் என்று தெரியவந்தது. ஆகவே மற்றுமொரு வெடரினரி காலேஜ் வேண்டும் என்று இப்போது புலப்படு கிறது. இதை நாம் எங்கே அமைப்பது போன்ற விஷயங்களையெல்லாம் பிற்பாடு தான் பரிசீலனை செய்து, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : விலங்கு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தும்போது, அந்த மாணவர்கள் விலங்குகளைப் பரிசோதிப்பதற்கு வகைசெய்யும் முறையிலும், பிற்பட்ட பகுதிகள் முன்னேற்றமடைவதற்கு துணை செய்யும் முறையிலும், விலங்குகள் அதிகமாக இருக்கும் கிராமப் பகுதிளில் அதை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், நகரப் பகுதியில் அதை ஏற்படுத்தாமல் கிராமப் பகுதியில் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலங்கு மருத்துவம் என்ற புதிய வார்த்தையின் காரணமாக, காட்டிலுள்ள விலங்குகளும் இதில் சேருமாதலால் இக்கல்லூரியைக் காட்டிலேயே அமைக்க வேண்டுமென்று சொல்லக்கூடும். இந்தக் கல்லூரி கால்நடை வைத்தியக் கல்லூரிதான். நகரங்களிலும் கால்நடைகள் கிடைக்கின்றன. எனவே இக்கல்லூரி கிராமத் தில் தான் இருக்க வேண்டுமென்பதில்லை. எங்கே கால்நடைகள் இருக் கின்றனவோ அங்கே இதை அமைக்கலாம்.